சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

அசல் வழக்கு எண்.136/2017

26.02.2026

வா.சா.4 திரு.மனோகரன், த/பெ. ஆறுமுகம்

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

எனக்கு சொந்த ஊர் பருத்தியூர். மங்களமும், சரவணனும் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். மங்களம் எனக்கு சின்னம்மா ஆவார். நான் சாட்சி கையொப்பம் செய்த ஆவணம் மங்களம் பெயரில் சரவணன் வாங்கினார். சரவணன் தான் மங்களம் பெயரில் வாங்கினார் என்று பத்திரத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து மங்களத்துக்கு சொந்தமானதாகும். கிரய ஒப்பந்தத்தை மங்களத்துக்கு சரவணன் எழுதிக்கொடுத்தார். இருவரும் சேர்ந்து கிரய ஒப்பந்தம் எழுதிக்கொண்டதாக சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. எனக்கு எழுதப்படிக்க தெரியாது. இருவரும் சேர்ந்து எழுதினால்தான் ஒரு ஒப்பந்தம் செல்லும் என்றால் சரியல்ல. மங்களத்திடமிருந்து சரவணன் ரூ.50,000/- பணம் வாங்கி கொண்டு ஒரு ஒப்பந்தம் எழுதியதாக பொய்சொல்கிறேன் என்றால் சரியல்ல. கிரய ஒப்பந்தத்தில் அனுபவம் ஒப்படைக்கப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளதா என்றால் ஆம் சொல்லப்பட்டுள்ளது. கிரய ஒப்பந்த பத்திரம் பதிவு செய்யப்படாததால் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. கிரய ஒப்பந்தத்தை நானும் மங்களமும் சேர்ந்து தயார் செய்தோம் என்றாலும் மங்களத்திற்காக பொய்யாக சாட்சி கையொப்பம் போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. கிரய ஒப்பந்தத்தில் உள்ளது சரவணனுடையது அல்ல என்றால் சரியல்ல. சரவணன் எக்காலத்திலும் கிரய ஒப்பந்தம் எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. மங்களம் எனக்கு சின்னம்மா என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. சரவணனும் எனது சித்தப்பா மகன் தான்.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.